குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.65/2019

அ.சா. 6

2024–ம் ஆண்டு டிசம்பர் 03–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி 06–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நல்லப்பன் | ஜாதி | |
| தந்தை பெயர் | பழனிசாமி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.58 மணி,

Accused A1. Patti Ramasamy A2.Kaliyamoorthi, present. Advocate Mr. Kanagaraj present for A1. Advocate Mr. A.Nagenthiran present for A2. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் எம் செட்டிப்பட்டியில் குடியிருந்து கொண்டு ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். 2018 ம் ஆண்டு நான் துளசிவிகாஸ் மெட்ரிக்குலேசன் பள்ளியில் நான் துணை முதல்வராக பணிபுரிந்தேன். அ.சா.1 எங்கள் பள்ளியில் முதல்வராக பணிபுரிந்தார். கடந்த 14.08.2018 ம் தேதி மறுநாள் சுதந்திர தின விழா கொண்டாடுவதற்காக ஏற்பாடுகள் செய்து கொண்டு இருந்தோம். அ.சா.1 பெண்மணி என்பதால் அவரை வீட்டிற்கு செல்லுமாறு அனுப்பி வைத்தோம். அ.சா.1 இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு செல்லும் வழியில் தொளசம்பட்டி ரயில்வே பாலம் அருகே 5 வது மைல் செல்லும் வழியில் உள்ள சுரங்கபாதையில் சென்ற போது அவர் கழுத்தில் அணிந்து இருந்த செயினை பறித்து விட்டதாக கேள்விபட்டேன்.

2. அன்றைய தினம் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. மறுநாள் 15.08.2018 ம் தேதி காலை 06.00 மணியளவில் சம்பவம் நடந்த இடம் வழியாக சென்று போது அங்கு கூட்டமாக இருந்தார்கள். போலீசார் அங்கு விசாரணை செய்து கொண்டு

இருந்தார்கள். நாங்கள் அருகில் சென்று பார்த்தோம். போலீசார் வரைபடம் வரைந்து விசாரித்தார்கள். என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். நானும் என்னுடன் இருந்த ஆசிரியர் கோவிந்தசாமி என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **(அந்த 2 வது கையெழுத்து அ.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் இது குறித்து என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

3. நான் துளசிவிகாஸ் மெட்ரிக்குலேசன் பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணிபுரிந்தேன் என்றாலும் துணை முதல்வராக பணிபுரியவில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் விசாரணையில் மேற்படி பள்ளியில் தமிழ் ஆசிரியராக பணிபுரிந்ததாக குறிப்பிடப்பட்டு இருந்தால் அது தவறு என்றால் சரி. போலீசார் விசாரணையில் எனது பெயர், முகவரி மற்றும் வயதை நான் கூறி தான் பதிவு செய்தார்கள். சம்பவம் நடந்த காலக்கட்டத்தில் எனக்கு 60 வயது என்றால் 59 வயதாகும்.

4. வழக்கு சம்பவம் சுரங்கபாதையில் நடந்ததாக போலீசார் விசாரணையிலும், முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சுரங்கப்பாதைக்கு சற்று தொலைவில் நடந்தது. அ.சா.1 என்னுடன் பணிபுரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதராவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை சுற்றியுள்ள பகுதிகள் குறித்து எனக்கு தெரியாது என்றால் மேட்டூரில் இருந்து தொளசம்பட்டி நோக்கி செல்லும் ரோட்டில் மாணிக்கம் என்பவரது நிலத்திற்கு அருகில் சம்பவம் நடந்தது.

5. சம்பவ இடத்தை சுற்றியுள்ள மற்ற இடங்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரி. நான் எம் செட்டி பட்டியில் குடியிருந்ததாக போலீசார் விசாரணையில் கூறியிருந்தேன் என்றால் சரி. நான் சம்பவ இடத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் பள்ளியில் எனது வீட்டிற்கு செல்வதற்கு வேறு வழி உள்ளது என்றாலும் சரியல்ல. நான் ஓமலூர் செல்வதற்காக சம்பவ இடம் சென்றேன். போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

6. (1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ஏற்கப்படுகிறது)

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 02.16 மணி,

ஒம்/–ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.